# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.78/2023 நாள் : 03.10.2023**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும் இன்று (03.10.2023) கோடம்பாக்கம் மண்டலம், மேற்கு சைதாப்பேட்டை, திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையத்தை திறந்து வைத்தனர்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும் இன்று (03.10.2023) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-142, மேற்கு சைதாப்பேட்டை, திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 0.40 எம்.எல்.டி திறன் கொண்ட புதிய கழிவுநீர் உந்து நிலையத்தை திறந்து வைத்தனர்.

**பின்னர் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:–**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-142, திவான் பாஷ்யம் தெருவில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் 0.40 எம்.எல்.டி திறன் கொண்ட புதிய கழிவுநீர் உந்து நிலையம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிவுநீர் உந்து நிலையத்தின் மூலம் தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுதல் மற்றும் பிரதான கழிவுநீர் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது தடுக்கப்படும். இந்தத் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,250 பொதுமக்கள் பயனடைவார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே பகுதிகளில், சுமார் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் செயல்பாட்டில் உள்ளது. மேலும், கூடுதலாக, ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் தொடங்க உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.08.2023 அன்று பேரூரில்

ரூ.4276.44 கோடி மதிப்பீட்டில் 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகளில் மொத்த கொள்ளளவான 13.222 TMC-யில் தற்போது 9.56 TMC நீர் இருப்பு உள்ளது. வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்னரே ஏரிகளில் போதுமான நீர் உள்ளது. வடகிழக்குப் பருவமழையின்போது பெறும் நீரைக் கொண்டு இன்னும் ஓராண்டு காலத்திற்கு எந்தவித இடர்ப்பாடுமின்றி பெருநகர சென்னை மாநகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியைத் தவிர பிற மாவட்டங்களுக்குத் தேவையான குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. கர்நாடகா மாநிலத்தில் தற்போது பெய்துவரும் மழையின் காரணமாக நீர்வரத்துப் பாதைகளில் போதிய அளவில் உள்ள 240-க்கும் மேற்பட்ட குடிநீர்த் திட்ட ஆதாரங்களைக் கொண்டு சீரான முறையில் அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் திரு.இரா.துரைராஜ் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.ஸ்ரீதரன் அவர்கள், திரு.ப.சுப்பிரமணி அவர்கள், திரு.ப.மோகன் அவர்கள் மற்றும் சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திரு.எம்.ஜெய்கர் ஜேசுதாஸ் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.